கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு இல்லத்தில் மீண்டும் சோதனை!

இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் கழகம் அஞ்சாது!

த.வெ.க. அரசுக்கு – கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எச்சரிக்கை!

சென்னை, அக். 30 -

கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு இல்லத்தில் த.வெ.க. அரசின் லஞ்ச ஒழிப்புத்துறை மீண்டும் சோதனை நடத்துவதையொட்டி விடுத்த வலைதளப் பதிவில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., " இந்தப் பூச்சாண்டிக் கெல்லாம் கழகம் அஞ்சாது" என எச்சரித்துள்ளார்.

அவரது வலைதளப் பதிவு வருமாறு:



கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்களது இல்லத்தில் மீண்டும் சோதனை என்ற பெயரில் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது த.வெ.க. அரசு.

நிர்வாகத் தோல்வியால் எழுந்துள்ள மக்கள் கோபத்தைத் திசைதிருப்பவும், இடைத்தேர்தல் தோல்வி பயத்திலும் சோதனை, கைது என நாடகமாடுகிறது த.வெ.க. அரசு.

இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் கழகம் அஞ்சாது!

இவ்வாறு அப்பதிவில் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் குறிப்பிட்டார்.

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், அக். 30 -

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் (02.11.2026 - திங்கட்கிழமை) மாலை 3.00 மணியளவில், காட்டுமன்னார்கோவில், எம்.ஆர்.கே. கூட்ட அரங்கத்தில், கழக தேர்தல் பணிக் குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதிகள் கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, மற்றும்



கழக அயலக அணி துணைச் செயலாளர் ப.பரிதி இளம் சுருதி எம்.சி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற வுள்ளது.

அதுசமயம், இக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட காட்டுமன்னார்கோவில், சிதம்பரம், புவனகிரி, குறிஞ்சிப்பாடி, கடலூர் ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள்,

மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,

மாவட்டக் கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

த.வெ.க. – காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில்

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது!

பா.ஜ.க. – தேசிய தலைமை கண்டனம்!

புதுடெல்லி, அக். 30 -

"த.வெ.க. - காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்து விட்டது" என்று பா.ஜ.க. தேசிய தலைமை குற்றஞ் சாட்டியுள்ளது.

தன் அதிகாரப் பூர்வ சமூக வலை தள பக்கத்தில், தமிழகத்தில் நிலவும் சட்டம் - ஒழுங்கு பிரச்சினை குறித்த வீடியோ ஒன்றை வெளியிட்டு, கடுமையாக விமர் சித்துள்ளது.

'த.வெ.க., காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து விட்டது.

தேனி சிறையில் இருந்து, 17 கைதிகள் தப்பியுள்ளனர்.

தமிழகம் முழுதும் குழந்தைகள் காணாமல் போகின்றனர்.

இந்த ஆட்சி நிர்வாகத்துக்கா, தமிழக மக்கள் ஓட்டளித்தனர்?' என அதில் கேள்வி எழுப்பப்பட்டு உள்ளது.

மழை நீர் தேக்கம்! பொதுமக்கள் பாதிப்பு!

கோவை மாநகரில் சாலைகளை உடனடியாகச் செப்பனிடுவீர்!

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக் வலியுறுத்தல்!

கோவை, அக். 30 -

உள்ளாட்சித் தேர்தல் நெருங்கி வர உள்ள நிலையில் மாநகராட்சியில் செய்ய வேண்டிய அடிப்படை தேவைகளை வேண்டுமென்றே த.வெ.க. அரசு செய்யாமல் மாமன்றத்தில் அதிகமாக உள்ள திமுக கவுன்சிலர்களுக்கு அவப் பெயர் ஏற்படுத்த நினைக்கிறார்கள் என திமுக தீர்மானக்குழு மாநில செயலாளரும், முன்னாள் மாநகர் மாவட்ட தி.மு.க. செயலா



ளருமான நா.கார்த்திக் கோவையில் செய்தியாளர்கள் சந்திப்பில் குற்றம் சாட்டியுள்ளார்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கோவையில் செம்மொழிப் பூங்கா, ஜி.டி. நாயுடு மேம்பாலம், பெரியார் நூலகம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட தற்போதைய நிர்வாகத்தில் பல பணிகள் முடங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

கோவையில் பெய்த மழையால் பல்வேறு பகுதிகளில் மழைநீர் வீடுகளுக்குள் புகுந்து பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மழைக்காலத்திற்கு முன்பாக ஓடைகள், ராஜா வாய்க்கால் உள்ளிட்ட நீர் வழித்தடங்களை முறையாகத் தூர்வாராததே இதற்குக் காரணம் எனக் குற்றம்சாட்டியவர், பல இடங்களில் சாலைகள் சேதமடைந்துள்ளதுடன், கோவை கிழக்கு மண்டலத்தில் நூற்றுக்கணக்கான பணிகள் நிலுவையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், பேசிய கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக்; புதிய நிறுவனங்கள் ஒப்பந்தப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பழைய டெண்டர் எடுத்த அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பித்தால், தொழில்நுட்பத் தகுதி இல்லை எனக் கூறி சில பணிகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகக் குற்றம்சாட்டினார்.

பூங்கா பராமரிப்புப் பணிகளுக்கான ஒப்பந்தத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், மாமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தும் அதிகத் தொகைக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தி.மு.க.வுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தும் நோக்கில் அதிகாரிகள் செயல்படுவதாகவும் குற்றம்சாட்டினார்.

எனவே, மழைநீர் வீடுகளுக்குள் புகுவதைத் தடுக்க மாநகராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நிலுவையில் உள்ள வளர்ச்சிப் பணிகளை விரைந்து முடித்து மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அரசு வழக்கறிஞர் நியமனத்தில்

ரூ.15 லட்சம் லஞ்சம் பெற்ற அமைச்சர் ஆனந்த் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்?

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு நெல்லையில் பேட்டி!

நெல்லை, அக். 30 -

அரசு வழக்கறிஞர் நியமனத்தில் ரூபாய் 15 லட்சம் லஞ்சம் பெற்றதாக அமைச்சர் ஆனந்த் மீது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்த பின்னரும் அவர் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? தேனி சிறையில் இருந்து கைதிகள் தப்பித் தார்களா, தப்பவிடப் பட்டார்களா?

என சட்டபேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப் பியுள்ளார்.

திருநெல்வேலி மாவட்ட ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் தற்போது கிடப்பில் போடப்பட்டது குறித்து மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளித்த முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடந்த திராவிட மாடல் ஆட்சியில் நெல்லை மாட்டம் ராதாபுரம், நாங்குநேரி மற்றும் களக்காடு உள்ளிட்ட 7 பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூ.423 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வந்தன. சேரன்மகாதேவி தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து சுத்திகரித்து, கடந்த ஜூன் மாதத்திற்குள் சுமார் 50,000 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், புதிய அரசு பொறுப்பேற்ற நாள் முதல் காழ்ப்புணர்ச்சியோடு இத்திட்டத்தை முழுமையாகக் கிடப்பில் போட்டுவிட்டது.

அதேபோல் முன்னாள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்த வள்ளியூர் மாவட்ட தலைமை மருத்



துவமனைக்கு மருத்துவர்கள், செவிலியர்கள் என 160க்கும் மேற்பட்ட பணியிடங்களை நிரப்பாமல் இந்த அரசு காலியாக்கி வைத்துள்ளது. சர்வதேச தரத்தில் இராதாபுரம் அருகே ரூ.15 கோடியில் அமையவிருந்த விளையாட்டு மைதானப் பணிகளும் முடக்கப்பட்டுள்ளன. இந்த மக்கள் நலத்திட்டங்களை உடனடியாகத் தொடங்கவில்லை என்றால் நெல்லையில் மிகப் பெரிய மக்கள் போராட்டம் வெடிக்கும் என்று மாவட்ட ஆட்சியரிடம் எச்சரித்துள்ளோம்.

தேனி சிறையிலிருந்து கைதிகள் தப்பி ஓடியது திட்டமிட்ட நாடகமாகவே தெரிகிறது. சிறைத் துறை மற்றும் மின்துறை அமைச்சரான நிர்மல் குமார், மின் கொள்முதலில் ஒரு யூனிட்டுக்கு ரூ.37 முதல் ரூ.41 வரை முறை கேடு செய்ய முயன்ற மெகா ஊழல் அம்பலமானது. அதைத் திசைதிருப்பவே கைதிகள் தப்பவிடப் பட்டார்களா அல்லது திரைப்படங்களில் வருவது போல போலீஸாரை அடித்துவிட்டு தப்பித்தார்களா என்ற சந்தேகம் எழுகிறது. தமிழக மின்சார வாரியத்திற்கு ரூ.50 லட்சம் கோடி மதிப்பிலான கட்டமைப்பு உள்ளது. அதில் செயற்கை யானமின்தட்டுப்பாட்டை உருவாக்கி, நஷ்டத்தைக் காட்டி ஒட்டுமொத்த மின் துறையையும் அதானி நிறுவனத்திடம் ஒப்படைப் பதே அமைச்சர் நிர்மல் குமாரின் ஒரே திட்டம்.

ரூ.4.91 முதல் ரூ.5.50 வரை குறைந்த விலைக்குக் கிடைக்கக்கூடிய மின்சாரத்தையோ அல்லது ஒப்பந் தப்படி அதானி நிறுவனம் தரவேண்டிய முழு மின்சாரத்தையோ இவர்கள் பெறுவதில்லை. தி.மு.க. எழுப்பிய கடும் எதிர்ப்பின் காரணமாகவே ரூ.37க்கு மின் கொள்முதல் செய்ய விருந்த டெண்டர் தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளது. இது தி.மு.க. வுக்குக் கிடைத்த வெற்றி.

தற்போது செல்போன், சுங்கச்சாவடி ரீசார்ஜ் போல முன்கூட்டியே ரூ.10,000, ரூ.20,000 பணம் கட்டவைக்கும் 'ப்ரீபெய்ட் ஸ்மார்ட் மீட்டர்' திட்டத்தை பொதுமக்களிடம் திணிக்கப் பார்க்கிறார்கள். மக்கள் பணத்தை முன்கூட்டியே பிடுங்கி தனியார் முதலாளியிடம் கொட்டவே இந்த ஏற்பாடு, தி.மு.க.அரசு பொறுப்பேற்றதுமே ஆவின் பால் கொள் முதலை கடுமையாகக் குறைத்துவிட்டனர். ஆந்திராவைச் சேர்ந்த தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டு, ஆவின் விலையை தொடர்ந்து ஏற்றி மக்களை தனியார் பாலை நோக்கித் தள்ளுகின்றனர்.

அதேபோல சென்னை விமான நிலையத்தையும் தனியாருக்கு கொடுக்கும் ஒப்பந்தத்தில் முதலமைச்சரிடம் ரகசியமாக கையெழுத்து வாங்கியுள்ளனர். ஒரு முதல மைச்சர் என்பவர் 24 மணி நேரமும் விழிப்புடன் இருந்து ஆட்சி நடத்த வேண்டும். படப்பிடிப்புக்குச் சென்று விட்டு வந்து வீட்டில் ஓய்வெடுப்பது போல் செயல் படக் கூடாது.

உளவுத்துறை கொடுக்கும் முக்கியத் தகவல்கள் எதுவும் முதல்வரின் கவனத்திற்குச் செல்வதில்லை. அவரைச் சுற்றியுள்ள குறிப்பிட்ட ஆந்திரா கும்பலும், இடைத்தரகர்களும்தான் அரசை இயக்குகிறார்கள்.

தமிழ்நாட்டில் கஞ்சா, மெத்தபெட்டமைன் உள்ளிட்ட கொடிய போதைப் பொருட்கள் தங்குதடையின்றி புழங்குகின்றன. 2.5 வயது பச்சிளம் குழந்தை மீதான பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட வழக்குகளில் 70 சதவீதத்துக்கும் அதிகமான குற்றவாளிகள் த.வெ.க.நிர்வாகிகளாகவே உள்ளனர்.

இராதாபுரம் கல்குவாரி விவகாரத்தில் கேரளாவுக்கு கனிமவளங்கள் கடத்தப்படுவதை அரசு முழுமையாக, நிரந்தரமாகத் தடை செய்ய வேண்டும். தமிழகத்தில் த.வெ.க.என்ற பெயரில் பச்சையாக பா.ஜ.க.வின் பினாமி ஆட்சிதான் நடக்கிறது. காங்கிரஸ், ராகுல் காந்தியை நடுத்தெருவில் நிறுத்திவிட்டு பா.ஜ.க.வுடன் மறைமுகக் கூட்டணி வைத்துள்ள இவர்கள் மக்களை ஏமாற்ற முடியாது.

அன்பில் மகேஷ் கைதில் 'ஆர்வம் காட்டும் ஊழலற்ற ஆட்சி' என்று நாடகமாடும் த.வெ.க.வின் உண்மை முகம் நீதிமன்றத்தில் அம்பலமாகியுள்ளது. அரசு வழக்கறிஞர் பதவிக்காக த.வெ.க. பொதுச்செயலாளர் மற்றும் அமைச்சருமான ஆனந்திடம் ரூ.15 லட்சம் லஞ்சம் கொடுத்ததாக வழக்கறிஞர் ஒருவர் குற்றம் சாட்டிய பிறகும் அவர் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? என கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு அவர் கூறினார்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; அங்கிங்கெனாதபடி எங்கப் பார்த்தாலும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆள்கடத்தல்ன்னு செய்தியும், பெருவாரியான வற்றில் த.வெ.க.வினர் இருப்பது பற்றிய செய்தியும் வந்த வண்ணம் இருக்கே. இதப்பத்தி என்ன நினைக்கிற?

பட்டணம் : ஆமாமய்யா; நினைக்கிறதுக்கு என்ன இருக்கு! 'ஆல் ஏரியாவிலேயும் அண்ணன் தான் கில்லிங்கறது' ஞாபத்துக்கு வருது. காலம் இப்படியே போகாது. வினை விதைத்தவன் வினை அறுப்பான்! பார்க்கத் தானே போறோம்.

